இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 255 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 13 – ஞாயிற்றுக்கிழமை 26 ஏப்ரல் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 255 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 13 - Sunday 26 April 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00



கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் காலை, முரசொலி செல்வம் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை கோடம்பாக்கம் “முரசொலி” வளாகத்தில் அமைந்துள்ள முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

## என் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அண்ணனாக உடனிருந்து வழிகாட்டிய

# முரசொலி செல்வத்தின் நினைவுகளைப் போற்றுகிறேன் !

## பிறந்தநாள் செய்தியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கம்!

**சென்னை, ஏப். 26-**

**முரசொலி செல்வம் அவர்களுக்கு நேற்று முன்தினம் பிறந்த நாள் ஆகும்.**

**இந்நாளையொட்டி, கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம், சென்னை கோடம்பாக்கம் “முரசொலி” வளாகத்தில் அமைந்துள்ள முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.**

**இந்நாளில் கழகத் தலைவர் அவர்கள் விடுத்துள்ள வலைதளப் பதிவில், “என் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அண்ணனாக உடனிருந்து வழிகாட்டிய முரசொலி செல்வம் அவர்களது நினைவுகளைப் போற்றுகிறேன்” என்று உருக்கமுடன் குறிப்பிட்டுள்ளார்.**

அதன் விவரம் வருமாறு :-

திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம் முரசொலி செல்வம் அவர்களின் பிறந்தநாள் இன்று. இதனையொட்டி சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள முரசொலி அலுவலகத்தில் அமைந்திருக்கும் முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மரியாதை செலுத்தினார். அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவப் படத்திற்கும் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் கே.இராஜமாணிக்கம், இ.ஆ.ப. (ஓய்வு), ‘முரசொலி’ பொது மேலாளர் எஸ்.இராஜசேகரன், ‘முரசொலி’ செய்தி ஆசிரியர்கள் கே.சேது, இள.மதியழகன், ‘முரசொலி’ துணை ஆசிரியர் மு.முத்தையா, ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து முதல்வர் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**திராவிட முரசொலித்த கொள்கைச் செல்வத்தின் பிறந்தநாள்.**

**தலைவர் கலைஞரின் நிழலில் வளர்ந்து, எனக்கு நிழலாய் இருந்தவர் அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள்!**

**பதவிகளையோ விளம்பரங்களையோ விரும்பியவரும் அல்லர், அதிகாரத்தைப் பயன்படுத்திச் சிறையிலடைத்தபோது அஞ்சவும் செய்யாதவர். சிலந்தியாய் எழுத்துவலை பின்னி எதிரிகளைச் சிக்க வைத்தவர்.**

**என் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அண்ணனாக உடனிருந்து வழி காட்டிய முரசொலி செல்வம் அவர்களது நினைவுகளைப் போற்றுகிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

### உ.பி.யில் 4 வயது சிறுமி பாலியல் வன்கொடுமையில் பலி!

# சிறப்பு புலனாய்வுக்குழு விசாரிக்க வேண்டும்!

## உச்சநீதி மன்றம் உத்தரவு!

லக்னோ, ஏப். 26 -

பாஜக ஆளும் உத்தரப் பிரதேசத்தில் 4 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு உயிரிழந்த சம்பவத்தில், சிறப்பு புலனாய்வுக்குழு விசாரணைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் காசியாபாத்தில் கடந்த மாதம் 4 வயது சிறுமி பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் உரிய சிகிச்சை கிடைக்காமல் உயிரிழந்தார். இந்த வழக்கில் உரிய விசாரணை நடத்தப்படவில்லை என்று உச்சநீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. காசியாபாத் காவல்துறை கண்காணிப்பாளர் உள்ளிட்டோர் கடந்தவாரம் உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்க மளித்தனர். அதன் பிறகும், விசாரணைகள் சரியாக நடக்கவில்லை என்றும் குற்றவாளிகளைக் காப்பாற்ற முரண்பாடான ஆவணங்கள் தயாரிக்கப் பட்டுள்ளதாகவும் மனுதாரர் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது.

இதைத்தொடர்ந்து, சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் சிறப்பு புலனாய்வு குழுவை அமைத்து விசாரணை நடத்த உத்தரபிரதேச மாநில டி.ஜி.பி.க்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெண் ஐ.ஜி. தலைமையில் நாளைக்குள் சிறப்பு புலனாய்வுக்குழு அமைக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது. அனைத்து விசாரணை அதிகாரிகளும் பெண் அதிகாரிகளாக இருக்க வேண்டும் என்றும் விசாரணையை இரண்டு வாரங்களில் முடித்து உச்ச நீதிமன்றத்தில் அறிக்கை அளிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

குற்றவாளிகளைக் காப்பாற்ற முரண்பாடான ஆவணங்கள் தயாரிப்பு என மனுதாரர் குற்றம் சாட்டியுள்ளனர். சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் சிறப்பு புலனாய்வு குழுவை அமைத்து விசாரணை நடத்தவேண்டும் எனலாம் பாதிக்கப் பட்டவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### தேர்தல் நடத்தை விதிகளில் பாகுபாடு காட்டுகிறார்!

# தலைமைத் தேர்தல் ஆணையரை தகுதிநீக்கம் செய்யவேண்டும்!

## 73 எம்.பி.க்கள் நோட்டீஸ் அளித்தனர்!

புதுடெல்லி, ஏப். 26 -

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை தகுதிநீக்கம் செய்யவேண்டும் என்று மாநிலங்களவை உறுப்பினர்கள் 73 பேர் நோட்டீஸ் அளித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் அதிகாரிகளை சட்டவிரோதமாக இடமாற்றம் செய்தது உள்ளிட்ட 9 குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ளன.

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் மீது 9 குற்றச்சாட்டுகளை முன்வைத்து, மாநிலங்களவை செயலாளரிடம், மாநிலங்களவை எம்.பிக்கள் தகுதிநீக்க தீர்மான நோட்டீஸ் வழங்கியுள்ளனர். காங்கிரஸ், தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி, சி.பி.எம்., சி.பி.ஐ. உள்ளிட்ட இந்தியா கூட்டணிக் கட்சிகளின் 73 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி நீக்க நோட்டீஸில் கையெழுத்திட்டுள்ளனர்.

அதில், தேர்தல் நடத்தை விதிகளை நடைமுறைப்படுத்துவதில் தலைமை தேர்தல் ஆணையர் பாகுபாடு காட்டுகிறார். பிரதமரின் விதிமீறல் மீது மட்டும் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. நடுநிலை தவறி செயல்படுகிறார் என்பதை முதல் குற்றச்சாட்டாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் சட்ட விரோதமாக அதிகாரிகளை இடமாற்றம் செய்தது, அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தியதாக 2வது குற்றச்சாட்டாக கூறப்பட்டுள்ளது.

மேலும், அரசியல் கட்சிகளை பொதுவெளியில் அவமதிக்கும் வகையில் ஒரு கட்சியை மட்டும் குறிப்பிட்டு கருத்து தெரிவிப்பது, தேர்தல் ஆணையத்தின் கடிதத்தில் பா.ஜ.க. அலுவலக முத்திரை இடம் பெற்றது ஆகியவை 3வது குற்றச்சாட்டாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

SIR மூலம் கோடிக்கணக்கில் வாக்காளர்களை நீக்கியது என்பது உள்ளிட்ட ஒன்பது குற்றச்சாட்டுகளை பதவி நீக்க நோட்டீஸில் எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

தலைமை தேர்தல் ஆணையராக ஞானேஷ் குமார் நீடிப்பது இந்திய அரசியலமைப்பின் மீதான ஒரு நேரடித் தாக்குதலாகும் என்று மாநிலங்களவை எம்.பி.க்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

---

### வாக்குப்பதிவு முடிந்து சீல் வைக்கப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் —

# வாக்கு எண்ணும் மையங்களில் பலத்த பாதுகாப்புடன் வைப்பு!

## துணை ராணுவப்படையினர் 24 மணிநேரமும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்!

சென்னை, ஏப். 26-

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நிறைவடைந்ததையடுத்து, வாக்குப் பதிவு இயந்திரங்கள் அனைத்தும் சீலிடப்பட்டு, பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையங்களில் வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் 234 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு சரியாக மாலை 6 மணிக்கு நிறைவடைந்தது. சுமார் 5 கோடியே 73 லட்சம் வாக்காளர்களுக்காக தமிழ்நாடு முழுவதும் 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகள் அமைக்கப் பட்டிருந்தன.

மாலை 6 மணிக்குள் வந்த வாக்காளர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின்படி, தமிழ்நாட்டில் 85 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. அதிகட்சமாக கரூர் மாவட்டத்தில் 92 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளும், சேலம் மாவட்டத்தில் 91 சதவீதம் வாக்குகளும் பதிவாகி உள்ளன. குறைந்தபட்சமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 76 சதவீதம் வாக்குகளும், சிவகங்கை மாவட்டத்தில் 77 சதவீதம் வாக்குகளும் பதிவாகி உள்ளன.

வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு, அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

இதனையொட்டி, தேர்தலில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் தமிழ்நாட்டில் உள்ள 62 வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் அதிகாரிகள் அதிகாரிகள், வாக்குச்சாவடி முகவர்கள் முன்னிலையில் இயந்திரங்கள் சீலிடப்பட்டு, பலத்த பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டன. சென்னையில் 16 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு இயந்திரங்களும், அண்ணா பல்கலைக்கழகம், லயோலா கல்லூரி, இராணி மேரி கல்லூரி ஆகிய 3 இடங்களில் உள்ள வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன.

வாக்கு எண்ணும் மையங்களைச் சுற்றிலும் 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மே 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் வரை, வாக்கு எண்ணும் மையங்கள் 24 மணி நேரமும் சி.சி.டி.வி. கேமரா மூலம் கண்காணிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### பிரதமர் மோடியை விமர்சித்துப் பேசினால் நோட்டீஸ் அனுப்புவதா?

# தேர்தல் ஆணையத்துக்கு காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம்!

## உள்நோக்கத்துடன் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாக சாடல்!

புதுடெல்லி, ஏப். 26 -

தேர்தல் விதிமீறலில் ஈடுபட்ட பிரதமர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு தேர்தல் ஆணையம் உள்நோக்கத்துடன் நோட்டீஸ் அனுப்பியுள்ளதாக ஜெய்ராம் ரமேஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடியும், ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவும் தொடர்ந்து தேர்தல் விதிமீறலில் ஈடுபட்டு வருவதாக காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது. இதுதொடர்பாக தேர்தல் ஆணையத்திடம் முறையிட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளது. இதற்கு காங்கிரஸ் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும், மோடி மற்றும் அமித்ஷா மீது நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரி உச்ச நீதிமன்றத்திலும் அக்கட்சி சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்நிலையில், மோடி, அமித்ஷாவின் தேர்தல் விதிமீறல் குறித்து தனது செய்தியாளர் சந்திப்பில் பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இதற்கு கண்டனம் தெரிவித்துள்ள காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ், தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில், அமலாக்கத்துறை உள்ளிட்ட அமைப்புகளை பிரதமர் மோடி பயன்படுத்தி மிரட்டி வருவதாகவே மல்லிகார்ஜுன கார்கே தனது பத்திரிகையாளர் சந்திப்பில் பேசியதாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து உடனுக்குடன் விளக்கம் கூறப்பட்ட நிலையிலும், உள்நோக்கத்துடன் தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பி இருப்பதாக ஜெய்ராம் ரமேஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.